***<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அம்பத்தூர்</u>***

**முன்னிலை திரு.P. ஜெய்சங்கர், B.A., M.L.,**
**நீதித்துறை நடுவர்**
**அம்பத்தூர்**
**2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11 ஆம் நாள் திங்கட்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 678/2023**

**TNTR29-006586-2023**

| | | |
|---|---|---|
| காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | : | அரசு தரப்பில் காவல் உதவி ஆய்வாளர் ட்டி.12 பூந்தமல்லி போக்குவரத்து புலனாய்வு பிரிவு குற்ற எண். 43/2023 |
| எதிரியின் பெயர் | : | கிறிஸ்டோபர், த.பெ.சின்னபிள்ளை |
| எதிரியின் ஜாதி அல்லது இனம் | : | கிறிஸ்தவர் |
| எதிரியின் தொழில் | : | டிரைவர் |
| எதிரிகளின் முகவரி | : | செம்மண்விளை வீடு, செருவல்லூர், கன்னியாகுமரி மாவட்டம் |
| எதிரிகளின் வயது | : | 59/2023 |
| குற்ற நிகழ்வு நாள் | : | 22.01.2023 |
| புகார் தேதி | : | 22.01.2023 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 27.02.2023 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 27.02.2023 |
| விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நாள் | : | 06.02.2024 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | : | 01.07.2025 |

| | | |
|---|---|---|
| தண்டனை மற்றும் உத்தரவு | : | எதிரியை சட்டப்பிரிவுகள் 279, 304(A) IPC & 134(a)(b) r/w 187 MV Act இன் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, குவிமுச 255(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் பற்றிய உத்தரவு இல்லை. |
| காலதாமதத்திற்கான காரணம் | : | அரசுதரப்பில் சாட்சிகளை விசாரணை செய்வதில் காலதாமதம் |

இந்த வழக்கு 23.11.2023 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த குற்றவியல் உதவி அரசு வழக்கறிஞர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் திரு.S.சிவக்குமார், திரு.S,ஷியாம் மற்றும் திரு.K.ரமேஷ் ஆகியோர் முன்னிலையாகியும் இருதரப்பிலும் வாதுரைகள் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

ட்டி.12 பூந்தமல்லி போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலைய குற்ற எண். 43/2023 காவல் ஆய்வாளரால் புலன் விசாரணை செய்யப்பட்டு எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) IPC & 134(a)(b) r/w 187 MV Act இன் கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்ற செயல் புரிந்துள்ளதாக சட்டப்பிரிவு 173(2) கு.வி.மு.ச - வின் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

## 1) <u>குற்ற இறுதி அறிக்கை</u> :-

கடந்த 22.01.2023 ஆம் தேதி காலை 00.15 மணியளவில் செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திரு.கண்ணப்பன் என்பவர் சி.டி.ஹெச்.ரோட்டில் அம்பத்தூர் கனி எண்டர்பிரைசஸ் எடை மேடை அருகில் சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையை கடக்க முயன்ற போது அதே சாலையில் அதே திசையில் எதிரி கிறிஸ்டோபர் என்பவர் TN-21-AX-1279 என்ற பதிவு எண் கொண்ட

டேங்கர் லாரியை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று மேற்படி ஆண் பாதசாரி கண்ணப்பன் என்பவர் மீது மோதியதில் அவர் நிலை தடுமாறி சாலையில் கீழே விழுவும் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு ஆவடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சென்று பின்பு மேல்சிகிச்சைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர் 25.01.2023 ஆம் தேதி காலை 09.50 மணியளவில் உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2) மேற்படி லாரி ஓட்டுனர் எதிரி கிறிஸ்டோபர் என்பவர் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி ஆண் பாதசாரி கண்ணப்பன் என்பவரின் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டு விபத்திற்குள்ளானவருக்கு எந்தவித முதலுதவி அளிக்காமலும், மேற்படி விபத்து பற்றி யாரிடமும் தகவல் தெரிவிக்காமல் வாகனத்தை நிறுத்தாமல் சென்று விட்டதாகவும், எனவே எதிரி கிறிஸ்டோபர் என்பவர் TN-21-AX-1279 என்ற பதிவு எண் கொண்ட டேங்கர் லாரியை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்ற செய்கையானது 279 இதச வின் படியும், அவ்வாறு ஓட்டிச்சென்று கண்ணப்பன் என்பவர் மீது மோதி அவருக்கு இறப்பை ஏற்படுத்திய செய்கையானது 304 (ஏ) இதச வின்படியும், மேலும் விபத்து ஏற்படுத்திவிட்டு வாகனத்தை நிறுத்தாமல் சென்ற செயலானது 134(a)(b) r/w 187 MV Act இன் குற்றம் புரிந்துள்ளார். எனவே 279, 304(A) IPC & 134(a) (b) r/w 187 MV Act இன் கீழ் TIW Redhills போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளரால் இந்நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை 07.11.2023 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தில் 23.11.2023 ஆம் தேதி அன்று கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரி பிணையில் இருந்ததால் அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிக்கு பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறைச் சட்ட பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

4. எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்து 06.02.2024 ஆம் தேதியன்று எதிரியின் மீது

சட்டப்பிரிவுகள் 279, 304(A) IPC & 134(a) (b) r/w 187 MV Act இன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக குற்றத்தைப் பற்றி விளக்கி கூறப்பட்டது. குற்றத்தின் சாராம்சம் குறித்து விளக்கி கேட்ட போது எதிரி குற்றத்தை மறுத்து சாட்சி விசாரணை வேண்டினார். எனவே இவ்வழக்கில் சாட்சிகளின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

5. அதன் அடிப்படையில் அரசுத்தரப்பில் பட்டியல் 1 முதல் 13 வரையிலான சாட்சிகள் காட்டப்பட்டு அதில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுதரப்பு சான்று பொருட்கள் இல்லை. எதிரி தரப்பில் எவ்வித சாட்சியமும் விசாரணை செய்யப்படவில்லை. அதே போல் எவ்வித சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின் வருமாறு</u> :-

கடந்த 22.01.2023 ஆம் தேதி செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வு பிரிவில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த உதவி ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் பேரில் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த கண்ணப்பன் என்பவரை மருத்துவமனையில் சென்று பார்ததுள்ளார். அதன்பின்பு அவரது மகனான அ.சா.1 முருகன் என்பவரிடம் நிகழ்வுகளை கேட்ட போது அவர் நடந்த விவரங்களைக் கூறி அவர் கொடுத்த **அ.த.சா.ஆ. 1** ஆன புகாரினைப் பெற்று, குற்ற எண்.43/2023 சட்டப்பிரிவுகள் 279, 338 இதச பிரிவுகளின் கீழ் **அ.த.சா.ஆ.4** ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளார். அதன்பின்பு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மணிகண்டன் மற்றும் விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு **அ.த.சா.ஆ. 2** ஆன பார்வை மகஜரும், **அ.த.சா.ஆ. 3** ஆன மாதிரி வரைபடமும் தயார் செய்து பார்வை மகஜரில் மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்று அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்தில் பாதிக்கப்பட்ட கண்ணப்பன் என்பவர் 25.01.2023 ஆம் தேதி காலை 09.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதால் வழக்கு கோப்புகளை ஆய்வாளரிடம் ஒப்படைத்து மேல் விசாரணைக்காக அனுப்பி வைத்துள்ளார்.

7) காவல் ஆய்வாளர் வழக்கு கோப்புகளை ஆராய்ந்து சட்டப்பிரிவுகள் 279,338 லிருந்து சட்டப்பிரிவுகள் 279, 304(A) IPC & 134(a) (b) r/w 187 MV Act என்று

பிரிவு மாற்றம் செய்து **அ.த.சா.ஆ.9** ஆன பிரிவு மாற்ற அறிக்கையை நீதமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அதன்பின்பு கே.எம்.சி. மருத்துவமனைக்கு சென்று பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து **அ.த.சா.ஆ. 5** ஆன பிரேத விசாரணை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன்பின்பு இறப்பின் உண்மைத்தன்மையை அறியும் பொருட்டு மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து **அ.த.சா.ஆ. 6** ஆன பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார்.

8) அதன்பின்பு விபத்து ஏற்படுத்திய எதிரியை கடந்த 27.02.2023 ஆம் தேதி எதிரியை கைது செய்து அன்றைய தினமே நிலைய ஜாமீனில் விடுவித்துள்ளார். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து **அ.த.சா.ஆ. 8** ஆன வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். மேலும் சாட்சி முருகன் என்பவரை மறுவிசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் அருண்பிரசாத் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் வினோத் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, அதன்பின்பு அனைத்து சாட்சிகளின் விசாரதணை முடித்து இறுதி அறிக்கை 07.11.2023 அன்று தாக்கல் செய்துள்ளார்.

9) புகார் **அ.த.சா.ஆ.1** பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.2**, மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.3** முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.4,** பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ.5**, பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.6,** விபத்து பதிவேடு **அ.த.சாஆ. 7**, மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ.8**,பிரிவு மாற்று அறிக்கை **அ.த.சா.ஆ.9**ஆகும். இதுவே அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் ஆகும்.

10) இவ்வழக்கில் கடந்த 01.07.2025 ஆம் தேதியில் அரசுதரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து அவற்றை கேள்விகளாக தொகுத்து சட்டப்பிரிவு 313 (1) (b) கு.வி.மு.ச. வின் கீழ் வினவிய போது, எதிரி அவற்றினை பொய் சாட்சி, பொய் வழக்கு என்று மறுத்து கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சிகள் இல்லை எனக் கூறினார். எனவே எதிரி தரப்பில் வாய்மொழி சாட்சிகள் யாரும் இல்லையென அன்றைய தினமே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**11). இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை :-**

இவ்வழக்கில் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) IPC & 134(a)(b) r/w 187 MV Act இன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.

**12) தீர்வு**

(i) இருதரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டதால், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசுதரப்பு குற்றவியல் உதவி வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்தும் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களில் இருந்தும், எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) IPC & 134(a)(b) r/w 187 MV Act இன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

(ii) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில் அரசுதரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் எதிரியின் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்காமல் அரசுதரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாகவும், இவ்வழக்கின் சான்றாவணங்களான பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஆகியவை வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றும் அரசுதரப்பு தமது வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

(iii) இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 திரு.முருகன் என்பவர் தமது சாட்சியத்தில் விபத்து சம்பவம் பற்றி கேள்வியுற்றது குறித்தும், புகார் அ ளித்தது குறித்தும் சாட்சியம் அளித்திருந்தாலும், தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் புகாரை காவல் நிலையத்தில் வைத்து போலீசார் எழுதிக்கொண்டார்கள் என்றும், புகாரில் உள்ள சங்கதிகளை போலீசார் சொல்லித்தான் தெரிந்து கொண்டேன் என்றும் விபத்து ஏற்படுத்தியதாக

சொல்லப்படும் நபரை தான் பார்க்கவில்லை என்றும், சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து அ.சா.1க்கு வழக்கு சம்பவமான விபத்து குறித்து எந்த விபரமும் தெரிந்திருக்கவில்லை என்பது உறுதியாவதுடன் புகாரில் உள்ள சங்கதிகளும் அவருக்கு தெரிந்திருக்கவில்லை என்பது உறுதியாகிறது.

(iv) மேலும் அ.சா.1 எதிரியை அடையாளம் காட்டியோ, எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், அரசுதரப்பில் குறிப்பிட்டுள்ள வாகனத்தை இயக்கி வந்து விபத்து ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு எவ்வித சாட்சியமும் அளிக்காத நிலையில் மேற்கண்ட நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 இன் சாட்சியம் அரசுதரப்பு வழக்கிற்கு உறுதியூட்டுவதாக அமையவில்லை என நீதிமன்றம் கருதுகிறது.

(v) இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.2 தமது சாட்சியத்தில் தாம் 22.01.2023 அன்று இரவு 12.15 மணியளவில் தான் லாரியில் சென்று கொண்டிருந்த போது ஒரு நபர் விழுந்து கிடந்ததாகவும், விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனரை தான் பார்க்கவில்லை என்றும் அரசுதரப்புவழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்கண்ட அ.சா.2 விபத்து சம்பவத்தை கண்ணுறவில்லை என்பது உறுதியாவதுடன் எதிரி பற்றியும், எதிரியின் குற்றச்சாட்டு பற்றியும் எவ்வித சாட்சியம் அளிக்கவில்லை என்பது உறுதியாகிறது.

(vi) இவ்வழக்கில் மகஜர் சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.3 திரு.மணிகண்டன். அ.சா.4 திரு.விஜயகுமார் ஆகியோர் தங்களது சாட்சியத்தில் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 திரு.முருகன் என்பவர் தங்களது நண்பர் என்றும், அவருடன் காவல்நிலையம் சென்று காவல் நிலையத்தில்வைத்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்தோம் என்றும் சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று சரிவர புலன்விசாரணை செய்தாரா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதுடன் இவ்வழக்கின் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஆகியவை நிலையத்தில் வைத்து தயார் செய்து கொண்டாரா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

(vii) இவ்வழக்கில் அ.சா.5 ஆக விசாரணை செய்யப்பட்ட பிரேத விசாரணை பஞ்சாயத்து சாட்சியான திரு.ஸ்டீபன் என்பவர் தான் காவல் நிலையம் சென்று பிரேத

விசாரணை அறிக்கையில் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அரசுதரப்பு வழக்கில் குறிப்பிட்டுள்ளது போல பிரேத விசாரணை மேற்கொண்டாரா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

(viii) இவ்வழக்கில் அ.சா.6 ஆக விசாரணை செய்யப்பட்ட திரு.செந்தில்குமார் என்பவர் கடந்த 22.01.2023 அன்று விபத்து தொடர்பாக போக்குவரத்து போலீசார் தன்னை அழைத்ததாகவும், தான் வாகனத்தின் ஆவணங்களைக் கொடுத்து எதிரியை ஜாமீனில் அழைத்து சென்றதாகவும் சாட்சியம்அளித்துள்ள நிலையில் மேற்கண்ட சாட்சியின் சாட்சியம், எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் வகையில் இல்லை என்று நீதிமன்றம் கருதுகின்றது.

(ix) இவ்வழக்கில் அ.சா.6 ஆக விசாரணை செய்யப்பட்ட உதவி ஆய்வாளர் திரு.வெங்கடேசன் அ.சா.8 ஆக விசாரணை செய்யப்பட்ட காவல் ஆய்வாளர் திருமதி.வள்ளி ஆகியோர் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 திரு.முருகன் என்பவரிடம் புகார்மனுவை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன் விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, சான்றாவணங்கள் பெற்று, இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்திருந்தாலும், இவ்வழக்கில் அரசுதரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் எதிரி அவர் இயக்கிய வாகனமான TN-21-AX-1279 என்ற பதிவு எண் கொண்ட டேங்கர் லாரியை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் இயக்கி விபத்தை ஏற்படுத்தியதாக அரசுதரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் எவ்வித சாட்சியும் அளிக்கவில்லை.

(x) மேலும் அரசுதரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் எதிரியை அடையாளம் காட்டியோ, எதிரி அரசுதரப்பு வழக்கில் குறிப்பிட்டுள்ளது போல் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்றோ? எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே எதிரி மீது சட்டப்பிரிவு 279, 304(A) IPC & 134(a) (b) r/w 187 MV Act இன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில எவ்வித சந்தேகத்திற்கும்இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இநநீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13) **முடிவாக,**

இவ்வழக்கின் எதிரி மீது சட்டப்பிரிவு 279, 304(A) IPC & 134(a)(b) r/w 187 MV Act இன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசுதரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, கு.வி.மு.ச 255(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது.

13) இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்படவில்லை. எனவே, அது பற்றிய உத்தரவு இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக மொழிதல் செய்தும், அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025- ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையில் அவையறியப் பகரப்பட்டது.

(திரு.P.ஜெய்சங்கர்)
நீதித்துறை நடுவர்
அம்பத்தூர்.

அரசு தரப்பு சாட்சிகள்

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1 | திரு.முருகன் |
| அ.த.சா.ஆ.2 | திரு.அந்தோணிராஜ் |
| அ.த.சா.ஆ.3 | திரு.மணிகண்டன் |
| அ.த.சா.ஆ.4 | திரு.விஜயகுமார் |
| அ.த.சா.ஆ.5 | திரு.ஸ்டீபன் |
| அ.த.சா.ஆ.6 | திரு.செந்தில்குமார் |
| அ.த.சா.ஆ.7 | திரு.வெங்கடேசன் |
| அ.த.சா.ஆ.8 | திருமதி.வள்ளி (காவல் ஆய்வாளர்) |

அரசுதரப்பு சான்றாவணங்கள் :-

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகார் |

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.2 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.3 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.5 | பிரேத விசாரணை அறிக்கை, |
| அ.த.சா.ஆ.6 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.த.சா.ஆ.7 | விபத்து பதிவேடு |
| அ.த.சா.ஆ.8 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.த.சா.ஆ.9 | பிரிவு மாற்று அறிக்கை |

எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :- இல்லை

## <u>Case Summary : -</u>

1) எதிரி சிறையில் இருந்த நாட்கள் -- ----

2) குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் -- 07.11.2023

3) எதிரி முதலாவதாக விசாரிக்கப்பட்ட நாள் -- 06.02.2024

4) எதிரி மீதான குற்றச்சாட்டை விளக்கிக் கேட்ட நாள் -- 06.02.2024

5) இடைக்கால மனு விபரம் -- -------

6) சாட்சிகளின் விசாரணை நாள்

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.1 | -- | முதல் விசாரணை | -- | 18.11.2024 |
| | | குறுக்கு விசாரணை | -- | 18.11.2024 |
| அ.சா.2 | -- | முதல் விசாரணை | -- | 18.11.2024 |
| | | குறுக்கு விசாரணை | -- | 18.11.2024 |
| அ.சா.3 | -- | முதல் விசாரணை | -- | 18.11.2024 |
| | | குறுக்கு விசாரணை | -- | 18.11.2024 |
| அ.சா.4 | -- | முதல் விசாரணை | -- | 18.11.2024 |
| | | குறுக்கு விசாரணை | -- | 18.11.2024 |
| அ.சா.5 | -- | முதல் விசாரணை | -- | 04.12.2024 |
| | | குறுக்கு விசாரணை | -- | 04.12.2024 |
| அ.சா.6 | -- | முதல் விசாரணை | -- | 18.03.2025 |
| | | குறுக்கு விசாரணை | -- | -------- |
| அ.சா.7 | -- | முதல் விசாரணை | -- | 04.06.2025 |
| | | குறுக்கு விசாரணை | -- | 04.06.2025 |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.8 | -- | முதல் விசாரணை | -- | 24.06.2025 |
| | | குறுக்கு விசாரணை | -- | 24.06.2025 |

7) எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 313ன் கீழ்

விசாரிக்கப்பட்ட நாள் -- 01.07.2025

8) எதிரிகள் தலைமறைவாக இருந்த விபரம் -- -----

9) மாண்புமிகு மேல் நீதிமன்ற தடை உத்தரவு விபரம் -- இல்லை

(திரு.P.ஜெய்சங்கர்)
நீதித்துறை நடுவர்
அம்பத்தூர்.

குறிப்பு :-

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இல்லை.

2) காவல் துறையினருக்கு வழக்கின் முடிவு தெரிவிக்கப்பட்டது.

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர்,
அம்பத்தூர்.